

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் ஆலோசனை வழங்கி பேசினார். உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., ம.இராஜி, திமுக நிர்வாகிகள் பி.டி.சி.செல்வராஜ், கே.ஜெ. ரமேஷ், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரிஸ்ரீதர், பா.நரேஷ்குமார் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், காஞ்சனா சுதாகர், ஜெ.மகாதேவன், எஸ்.சங்கர் , ஆர்.ஜெயசீலன், கூட்டணி கட்சி நிர்வாகிகள் யுவராஜ், தாஸ், மு.பாபு, அந்திரிதாஸ், அட்கோ மணி, கார்த்தி, மணி, நீலவலத்து நிலவன் ஆதவன், அருண் கௌதம், தளபதி சுந்தர், ஷேக் தாவூத், உள்பட பலர் உள்ளனர்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் முதல மைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், தென் சென்னை மாவட்டத்தில் தகுதி வாய்ந்த 125க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சார்ந்த 259 பெண் குழந்தைகளுக்கு தலா 25,000/ ரூபாய்க்கான அரசு சேமிப்பு பத்திரங்கள் மற்றும் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியை சார்ந்த 118 இளம் பெண்களுக்கு அதிக பட்சமாக த தலா ரூ.50000/ வரையிலான காசோலைகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். உடன் அசன் மௌலானா எம்.எல்.ஏ., மண்டலக் குழு தலைவர்கள் இரா. துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, மோகன் குமார் எம்.சி., அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை (SIR) கண்டித்து

# திருவள்ளூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் - கழகத்தினர் திரளாகப் பங்கேற்போம்!

## திருவள்ளூர் மத்திய மாவட்டக் கூட்டத்தில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர், நவ. 10

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் காக்களூரில் மாவட்ட அவைத் தலைவர் மா. இராஜி தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் வரவேற்புரை யற்றினார்

மேலும் இக்கூட்டத்தில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பூவை தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார் த.எத்திராஜ், ஜி.ரா ஜேந்திரன், ஜி.விமல் வர்ஷன், வி.குமார், காஞ்சனா சுதாகர், ஜெ.மகாதேவன், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினார்

அப்போது பேசிய அமைச்சர் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் SIR க்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை! என்ற முறையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் விடுத்த அழைப்பிற்கிணங்க வருகை தந்த 49 கட்சிகளின் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்தும் இக்கூட்டத்தில் பங்கேற்காத கட்சித் தலைவர்களை அவரவர் கட்சிகளில் SIR குறித்து விவாதித்து ஜனநாயகத்தைக் காத்திடும் முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்ட முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை பாராட்டி நன்றி தெரிவித்து கொள்கிறோம்

இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளது. இதில் சிறுபான்மையினர் பெண்கள் வாக்குகள், பட்டியல் இன மக்களின் வாக்குகள் மற்றும் பா.ஜ.க.,வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறிவைத்து நீக்கும் நோக்கோடு தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களைச் சேர்க்கும் சதித் திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசை தனக்குப் பாதுகாவலாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனைச் செய்திட முயன்றிருப்ப தோடு, பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் S.i.R திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டி புதைப்பதாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது.

சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.)வின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடுகிறது.

எனவே, இந்த S.I.R சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம்,

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளதை கண்டித்து 'மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் நாளை 11 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை, அன்று காலை 10.00 மணியளவில், திருவள்ளூர் இரயில் நிலையம் அருகில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது. இந்த கண்டன ஆர்பாட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் திரு R.S பாரதி EX M.P அவர்கள் கண்டன உரை ஆற்றுகிறார், எனவே ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மதச்சார்ப ற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள், திராவிட முன்னேற்ற கழகதின் மாநில மாவட்ட நிர்வாகிகள், மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி இந்நாள் முன்னாள் பிரதிநிதிக ள் கழக நிர்வாகிகள் நிர்வாக பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு S.I.R. க்கு எதிராக நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கட்சி கூட்டத்தில் நிறைவேற்றப்ப ட்ட தீர்மானத்தின் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து ஒரு பக்கம் சட்டப்போராட்டம் நடத்தி வருகிறோம் என்றாலும், தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருப்பதை நம்முடைய கூட்டணிக் கட்சிகளின் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள் இணைந்து வாக்கு திருட்டு நடைபெறாமல் கண்காணிக்க வேண்டியது அவசியமானது என்பதை கருத்தில் கொண்டு,

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள ஒன்றிய , நகர , பகுதி, பேரூர்களில் வாக்குச்சாவடிகளில் அடங்கிய நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் செயல் வீரர்கள் அனைவரும், பூத் அளவில் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்

நவம்பர் 24 தேதி அன்று திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆவடி தொகுதி திருவேற்காடு சுந்தர சோழபுரம் பகுதிக்கு நடைபெறும் அரசு விழாவிற்கும் மற்றும் ஆவடியில் அண்ணா திருவுருவ சிலை திறப்பு விழாவிற்கும் மற்றும் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் மிகச் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும்

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை அனைத்து பகுதிகளிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி பொதுக்கூட்டங்கள் நடத்தி சிறப்பாக கொண்டாடிட வேண்டும்

அது சமயம் ஆலோசனை கூட்டத்திற்கு ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் சன்பிராகஷ், டி.தேசிங்கு, என்.இ.கே. மூர்த்தி, தி.வை.இரவி, ஜி.ஆர். திருமலை, ஜி.நாராயண பிராசத், பேபிசேகர், பொன்.விஜயன், டி.முரளி கிருஷ்ணன், தி.வே.முனுசாமி, அணிகளின் அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பெ.வினோத், ஒ.ஏ. நாகூர் கனி, வி.தியாகராஜன், ஜி.எஸ்.சங்கீதா, ஏ.ஜெ.பவுல், ஆர். பிரவீன் குமார், ஏ.ஜி.ரவி, எம். மோகன், த.குமரேசன், கு.தமிழ் செல்வி, ஜேக்கப், விமல் ஆனந்த், ஷாஜகான், பி.குமரேசன், ஆதிகேசவன், ராஜேஷ் குமார், நிஜாம் லிங்கம், பாசிர், என்.பி.மாரி முத்து, தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி இந்நாள் முன்னால் பிரதிநிதி கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கொண்டார்கள் இதனை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் நடைபெற்றது இதில் கூட்டணி கட்சி தலைவர்கள் செயலாளர்கள் நிர்வாகிகள் யுவராஜ், தாஸ், மு.பாபு, அந்திரிதாஸ், அட்கோ மணி, கார்த்தி, மணி, நீல வளத்து நிலவன் ஆதவன், அருண் கௌதம், தளபதி சுந்தர், ஷேக் தாவூத், பங்கேற்றர்கள்



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி தொகுதி ஆரணி பேரூர் திமுக கழகத்தின் சார்பில் வார்டு 12 பாகம் 252 வாக்காளர் படிவம் சரிபார்த்தல் S I R வாக்காளர் சேர்த்தல் நீக்கல் நிகழ்ச்சி மாவட்டப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் அறிவுறுத்தலின் பேரில் பேரூர் கழகத்தின் செயலாளர் பி. முத்து தலைமையில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.ரோஸ் பொன்னையன், ஜி. கரிகாலன் முன்னிலையில் BLO அரசு அதிகாரி எம் லட்சுமி ஆகியோருடன் சேர்ந்து சரிபார்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை யொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 263 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் உணவு வழங்கப்பட்டது!



*சென்னை,நவ.10-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 263 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (09.11.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 56 அ, வள்ளுவர் நகர், பிரகாசம் சாலை பிராட்வே. 2) துறைமுகம் மேற்கு பகுதி: சத்தியவாணி முத்து நகர், பல்லவன் சாலை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி. கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ் நாட்டு நலன்களையும், எதிர் காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ் நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல். சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி. சதிஷ் குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

# SIRஐ கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் திரளாகப் பங்கேற்பீர்!

## பெரம்பூர் வடக்குப் பகுதிச் செயலாளர் அ.முருகன் வேண்டுகோள்!

*சென்னை, நவ. 10 -*

*தமிழ்நாட்டின் தொடங்கி உள்ள தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வுகளை கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் வரும் நவம்பர் 11ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று காலை 10 மணியளவில் சென்னை தங்க சாலை மணிகுண்டு அருகே உள்ள அரச அச்சகம் அருகில் நடைபெறும் மாபெரும் கண்டன கூட்டத்தில் பெரம்பூர் வடக்கு பகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சியினர் திரளாக பங்கேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெறச் செய்யுமாறு பகுதி செயலாளர் அ.முருகன் வேண்டுகோள்.*

*திமு கழகம் உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் இந்திய தேர்தல் ஆணையம் போதி அவகாசமும் மற்றும் முறையான வரையுறையும் கொடுக்காமல் இந்த தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வினை கொண்டு வந்து தகுதியான வாக்காளர்களை சேர்த்திட இயலாமல் போய் விடக்கூடிய சூழலை உருவாக்கியுள்ளது.*

*வாக்காளர் சீராய்வு என்ற பெயரில் தமிழ்நாடு வாக்காளர் பெருமக்களை பாடாய்படுத்தும் இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து மத சாரபற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பாக நாளை 11:11:2025 காலை 10 மணி அளவில் தங்கச் சாலை மணி குண்டு அருகில் அமைந்துள்ள அரசு அச்சகம் அருகில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெரம்*பூர் வடக்கு பகுதி திமுக பகுதி நிர்வாகிகள் , வட்ட செயலாளர்கள் , வட்ட நிர்வாகிகள் , மாவட்ட பிரதிநிதிகள் , பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தோழர்கள் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி செயலாளர் அ.முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் ஊனமலை கிராமத்தில் பாகம் எண். 216 SIR வாக்காளர்களை கணக்கிட்டு படிவத்தை உதவி தேர்தல் முகவர் பொதுமக்களிடம் வழங்கப்பட்டது. உடன் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர்.சாரதிமணிமாறன், ஒன்றிய கழகச் செயலாளர் ஜீ தமிழ், கழக நிர்வாகிகள் சிலம்பரசன் தங்கராஜ் தசரதன் தேவ் மாரியப்பன் ரமேஷ் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கஞ்சனூர் கோ.கண்ணையன்

### நவம்பர் 10 (1988)



கழகம் துவங்கிய நாள் முதலே தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி அவர்களோடு இணைந்து கழகப் பணியாற்றியவர்.

கஞ்சனூர் கிளைக் கழகச் செயலாளர், திருப்பனந்தாள் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கஞ்சனூர் ஊராட்சித் தலைவராகவும் – நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குன்னூர் மு. அரங்கநாதன்

### நவம்பர் 10 (2014)



நீலகிரி மாவட்டத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

குன்னூர் நகர பொருளாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

குன்னூர் நகராட்சித் தலைவர், குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நலப்பணிகளை சிறப்பாக செயல்படுத்தியவர்.

கழகப் பணியில் தொய்வு ஏற்படக்கூடாது என்று திருமணம்கூட செய்து கொள்ளாதவர்.

இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து பலமுறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.